விழுப்புரம் அரசு போக்குவரத்து கழக தொமுச முன்னாள் பொதுச் செயலாளர் பிரபா.தண்டபாணி அவர்களின் இளைய மகன் சுயமரியாதை திருமண விழாவை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி , திருமதி விசாலாட்சி பொன்முடி ஆகியோர் தலைமையேற்று நடத்தி வைத்தனர். விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி , சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா , மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் மாவட்டத் துணைச் செயலாளர்கள் டி என் முருகன், தயா.இளந்திரையன், தொமுச பொதுச் செயலாளர் வி. சேகர், அமைப்புச் செயலாளர் வேலு, நகர செயலாளர் இரா.சக்கரை , ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி.ராஜா, இரவிச்சந்திரன், பேரூர் செயலாளர் பா.ஜீவா, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதல்படி,நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நேற்று (30.01.2025) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக நடைபெற்ற மனிதநேய வார நிறைவு விழாவில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பீட்டர் ஞானராஜ் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் ஆதரித்து வ.உ.சி. பார்க்கில் நடைபயிற்சி மேற்கொண்டவர்களிடமும், நேதாஜி தினசரி மார்க்கெட் பகுதிகளிலும் கழக விவசாய அணி இணைச் செயலாளர் குறிஞ்சி என். சிவகுமார், மூன்றாவது மண்டல குழு தலைவர் காட்டு சுப்ரமணியம், கோட்டை பகுதி கழக செயலாளர் பொ.ராமச்சந்திரன், 36வது லட்ட மாமன்ற உறுப்பினர் பழனியப்பா செந்தில் உள்ளிட்ட பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

திருப்பூர் தெற்கு மாவட்டத்தில்

பேரறிஞர் அண்ணா நினைவு நாள்-அமைதிப் பேரணி!

மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிவிப்பு!

திருப்பூர், பிப். 1 - திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளரும், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவருமான இல.பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளான 03.02.2025 திங்கட்கிழமை அன்று திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் அமைதிப் பேரணி நடத்தியும், திருவுருவச்சிலை மற்றும் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்திட வேண்டுகிறேன்.

காஞ்சி தந்த காவியத் தலைவர், உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர், தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழ் இனத்திற்காகவும், தமிழ் நாட்டிற்காகவும், தமிழ் மொழிக்காவும் தன் வாழ் நாள் வரை தன்னை அர்ப்பணித்து தன் நலம் கருதாமல் பாடுபாட்டு தன் பேச்சால், எழுத்தல் தமிழனை தட்டி எழுப்பிய "தென் நாட்டு காந்தி" இந்நாட்டு இங்கர்சால்" என்று மக்களால் அழைக்கப்பட்டவர் "பேரறிஞர் அண்ணா"அவர்கள் மாபெரும் இயக்கமான தி.மு.கழகத்தை உருவாக்கிகழக தோழர்களுக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை தந்து, மதராஸ் என்ற பெயரை "தமிழ் நாடு" என்று மாற்றித் தந்தும்,"பேரறிஞர் அண்ணா" என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட நம் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளான 03.02.2025 திங்கட்கிழமை அன்று காலை 09.30 மணியளவில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் தாராபுரத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாவட்டக் கழகச் செயலாளர் ஆகிய எனது தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதேபோல் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் ஊராட்சி பகுதிகளில் கழகத்தின் சார்பாக அமைதிப் பேரணிகள் நடத்தியும், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், திருவுருவச்சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கும் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டுகிறேன்.

இந்நிகழ்ச்சிகளில் ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள், அந்தந்த பகுதிகளில் உள்ள கழக இன்னாள், முன்னாள் நிர்வாகிகள், சட்டமன்ற இன்னாள், முன்னாள் உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் இன்னாள், முன்னாள் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் இன்னாள், முன்னாள் மக்கள் பிரதி நிதிகள் மற்றும் கழக தோழர்களும், பொது மக்களும் பெருந்திரளாக பங்கெடுத்திடச் செய்ய வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மொழிப்போர்த் தியாகி

கீழப்பழுவூர் சின்னச்சாமி திருவுருவச் சிலைக்கு மரியாதை!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்தார்!

அரியலூர், பிப். 1 - அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூர் பேருந்து நிலையத்தில் மொழிப் போரில் உயிர் தியாகம் செய்த தியாகிகளுக்கான வீரவணக்க நாளில் தாய்மொழியாம் தமிழை காக்க தன்னுயிர் ஈந்த மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து, மலர் வளையம் வைத்தும், மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

உடன் மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திர சேகரன், லதாபாலு, ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.கென்னடி, ரெ.அசோகசக்ரவர்த்தி,மா.அன்பழகன்,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர். ராமராஜன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட துணைத் தலைவர் முத்தையா. பழனிச்சாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.முருகேசன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ.பிரபாகரன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பாலமூர்த்தி,மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்கள் கருணாநிதி, சகாதேவன், மாவட்ட பிரதிநிதிகள் கோ.கனகராஜ், சி.ஆரோக்கியம், ஆர்.ஜி.மணிவேல், மு.முத்தமிழ்செல்வன், த.நெடுஞ்செழியன், ஒன்றியதுணை செயலாளர்கள் சுந்தர், க.ரவி, தமிழரசி, மனோஜ், ஒன்றிய பொருளாளர் எம்.செல்வம்,

தொ.மு.ச. செயலாளர் பி.வி.அன்பழகன்,

ஒன்றிய தகவல்தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் பி.எம்.டி.அருண், சுபாஷிணி, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆசை.அன்பழகன், மூர்த்தி, கருணாநிதி, அப்துல்லா, ஒன்றியகுழு உறுப்பினர்கள் மூ.தங்கம், கிளை கழக செயலாளர் கீழப்பழுவூர் ரவி மற்றும் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

ப.முருகமணி ஏற்பாட்டில்!

மயிலாடுதுறை மன்னம்பந்தலில் தியாகி சாரங்கபாணி நினைவுத் தூணில் மரியாதை!

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்தனர்!

மயிலாடுதுறை, பிப்.1 - மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் மன்னம்பந்தலில் மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர்கள் ப.முருகமணி ஏற்பாட்டில் மொழிப்போர்த் தியாகிகள் நினைவு தினத்தை முன்னிட்டு மன்னம்பத்தலில் அமைதி ஊர்வலம் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஏ.வி.சி கல்லூரி வாசலில் உள்ள மொழிப்போர் தியாகி சாரங்கபாணி நினைவுத் தூணில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் மற்றும் கழகத்தினர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். நிகழ்ச்சியில் மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் பி.முருகமணி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலார்கள் பி.எம்.அன்பழகன், பஞ்சு.குமாh, மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், அமிர்த.விஜயகுமார், செல்லசேது.ரவிக்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத், அரசு வழக்கறிஞர் இரா. சேயோன், பேரூர் கழகச் செயலாளர்கள் அண்ணாதுரை, எஸ்.கே.முத்துராஜா, மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் வி.சௌமியன், எம்.கே.மருது, இரா.மனோகரன், பிரபாகர், தீபாசத்தியேந்திரன், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் க.சுரேஷ், ஒன்றியக் குழு முன்னாள் துணைத்தலைவர் பாhஸ்கர், தமிழக விவசாய தொழிலாளர் கட்சி மாநில கொள்கை பரப்பு செயலாளர் ஜெக.முருகன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் அவைத் தலைவர் கோபாலகிருஷ்ணன், துணைச் செயலளார்கள் மதனகோபால், இதயச்சந்திரன், பத்மாதேவிசீனிவாசன், பொருளாளர் சபரிராஜன், மாவட்ட பிரநிதிநிதிகள் ராஜேந்திரன், வெங்கடேசன் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்டம் திருமகல் ஒன்றியம் எரவாஞ்சேரி ஊராட்சியில் நடைபெற்ற மூன்றாம் கட்டமாக "மக்களுடன் முதல்வர்' திட்ட முகாமில் பயனாளி ஒருவருக்கு வீட்டுமனை பட்டாவை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார். உடன் நாகை மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழக செயலாளர்கள் திருமுருகல் தெற்கு ஆர்.டி.எஸ். சரவணன், திருமருகல் வடக்கு செல்வ. செங்குட்டுவன் மற்றும் பலர் உள்ளனர்.

தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம்,கழுகுபுலிக் காடு ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் 76 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவை முன்னிட்டு.பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகி சு.பாஸ்கர் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.பள்ளி தலைமை ஆசிரியர் நா. பாத்திமா விஜயராணி வரவேற்புரை நல்கினார்.ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் வீர சரவணன் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். இதில் பள்ளி வளர்ச்சி குழு உறுப்பினர் பாலு, முதுகலை வேதியல் ஆசிரியர் முனைவர் கே. அரங்கசாமி ஆகியோர் விழாவை தொகுத்து வழங்கினர்.முதுகலை ஆங்கில ஆசிரியர் முனைவர் கே. புவனேஸ்வரி நன்றி கூறினார்.விழாவில் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

நகரச் செயலாளர் இரா.மாரிமுத்து தலைமை!

நாகை நகர தி.மு.க. பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் – ஆர்.அருள்செல்வம் சிறப்புரை!

நாகை, பிப். 1 - நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. வார்டு செயலாளர்கள், பிரதி நிதிகள் மற்றும் பாகநிலை முகவர்கள்(பி.எல்.ஏ.2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள்(பி.எல்.சி.) கலந்தாய்வு கூட்டம் நாகையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து தலைமை தாங்கினார். மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன் வரவேற்றார். பொதுக்குழு உறுப்பினர் கே.பாண்டியன், நாகை நகரக் கழக அவைத்தலைவர் இரா. முருகையன், துணைச் செயலாளர்கள் பி.திலகர், சித்திராகுலோத்துங்கன், பொருளாளர் எம்.கே.அபுபக்கர், மாவட்ட பிரதிநிதி ஆர்.ரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், மாநில விவசாய அணி இணைச் செயலாளரும், நாகை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஆர்.அருள் செல்வம் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.தினேஷ்குமார், ஆர். ஆர்.குலோத்துங்கன், எஸ். பால்ராஜ், பி.முருகா னந்தம், வெற்றிச்செல்வன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் செல்வா, மரியதாஸ், மோகன்தாஸ், ப.ராஜா, எஸ்.எம்.ஏ.கணேசன், டி.கலையரசன், இரா. தங்கதுரை,விமல்மொக்கை, பிரதீப், கருப்பாயி, நாகை நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்தியன் மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கலந்து கொண்டனர். முடிவில் நகரக் கழக துணைச் செயலாளர் வெற்றிலைகடைசிவா நன்றி கூறினார்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம் புதூர் ஊராட்சியில் கிராம சபை கூட்டத்தில் நமது நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி கலந்து கொண்டார். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர், ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், கிராம மக்கள் கலந்து கொண்டனர்.